# 20 கூட்டாக மெய்ப்பொருள் காணுதல்

**இலக்கு**

*"பிள்ளைகளுடன் மெய்ப்பொருள் காணுதல்" என்பது மொழியையும் எண்ணத்தையும் மேம்படுத்துதற்கு மதிப்புள்ள அணுகுமுறையாக பெரும்பாலான மேற்கு-ஐரோப்பியப் பள்ளிகளில் புகழ்பெற்றதாக உள்ளது. அது பிள்ளைகளைக் கவரும் வினாக்களைப் பின்பற்ற அழைக்கின்றது. அவற்றுள் பெரும்பாலானவற்றுக்கு திட்டமான விடைகள் இல்லை. மொழி தொடர்பாக, பிள்ளைகள் தங்கள் வாய்வெளிப்பாடு, தகவலை உள்வாங்குதல் மற்றும் உருக்காட்டுதல் தகைமையைப் பயிற்சிசெய்வர்.*

தரம் 1 - 9 | 15 - 30 மணித்துளிகள்



**நூலியற் குறிப்புகள்:**
பல இணைப்புக்களை "Philosophizing with children" என்ற தலைப்பிலுள்ள இணையத்தளத்தில் தேடிப்பார்க்கலாம்.

**குறிப்புகள்:**

- ஆசிரியர் கருப்பொருள்களை பரிந்துரைக்கலாம், ஆனால் முடியுமாயின், அவை மாணவர்களிடமிருந்து வரவேண்டும். முன்கூட்டியே தேர்வுசெய்யப்பட்ட எண்ணக் கருக்களைத் தொகுப்பது பயனுடையதாகும் (ஊக்கி: "நீங்கள் கலந்துரையாடவும் மேலும் அவை பற்றி அறிய விரும்பும் தலைப்புகளையும் வினாக்களையும் கருத்திற்கொண்டு எழுதவும். அவை மிகக் கடினமான வினாக்களாகவும் அமையலாம்."). இக் கேள்விக் களஞ்சியத்திலிருந்து அடுத்த சில திங்கள்களின் வகுப்புக் கலந்துரையாடல்களுக்கு கேள்விகளைத் தேர்ந்தெடுக்கலாம்.
- மெய்ப்பொருள் காணுதற்கு பொருத்தமான தலைப்புகள் பெரியவர்கள் உடனடியாக மறுமொழி சொல்லமுடியாத பரப்புகளில் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டு: "நான் எங்கிருந்து வருகிறேன்?", "நல்ல நண்பன் என்றால் யார்?", "யார் மொழியைக் கண்டுபிடித்தது?", "இறப்புக்குப் பின்னால் என்ன நடக்கிறது?", "ஏன் இனவாதம் இருக்கின்றது?", "வெளிநாட்டவர் என்றால் உண்மையில் என்ன பொருள்?"
- கலந்துரையாடலுக்கான அறிமுகத்தினை ஒரு படத்தினாலோ, ஒரு கதையினாலோ, ஒரு நூலினாலோ, அல்லது ஒரு கலைப்பொருளினாலோ ஊக்குவிக்கலாம்.

---

**நடைமுறை:**

- வட்டமாக அமர்ந்திருந்து பேசுதல் சிறப்பாகும்.
- ஏனைய மாணவர்கள் தாமாகவே ஆக்கமுறையிலும் கட்டற்ற நிலையிலும் பணி செய்வார்களாயின், "மெய்ப்பொருள் காணுதல்" கலந்துரையாடலை முழு வகுப்புடன் அல்லது ஒன்று அல்லது இரண்டு குழு நிலைகளில் நடத்தலாம்.
- ஆசிரியர் கலந்துரையாடலைச் செம்மைப்படுத்தலாம், அல்லது அச்செயற்பாட்டை பயிற்சிபெற்ற திறமையுள்ள மாணவர்கள் மேற்கொள்ளலாம் (இதேபோல ஏனைய மேற்கொண்ட வகிபாகங்களும், பார்க்கவும் #14). இன்றியமையாதது என்னவெனில் மாணவர்களைக் கட்டுப்படுத்தாதிருக்க ஆசிரியர் முடிந்த அளவு தலையிடுவதை வேண்டுமென்றே தவிர்த்துக்கொள்கிறார்.
- உரையாடலுக்கு முன்னர் இன்னொரு முறை மாணவர்களுக்கு கலந்துரையாடல் விதிகளை நினைவூட்டுவது பயனுள்ளதாகும் (பார்க்கவும் #9). குறிப்பாக அவ்விதி யாரையும் நகைப்புக்கு இடமாக்குதற்கு அல்ல என்பதை வலியுறுத்தவும். மெய்ப்பொருள் காணுதலில் எல்லோருடைய பங்களிப்பையும் சரியான அல்லது பிழையான மறுமொழிகள் இல்லை என்னும் விதியினையும் சீரியதாகக் கருதவேண்டும். கலந்துரையாட முன்னர் பங்கேற்பவர்களுக்கு இது மீண்டுமொரு முறை தெளிவுறுத்தப்பட வேண்டும்.
- கட்டற்ற வெளிப்பாடே மெய்ப்பொருள் காணுதலின் நடுவணாகும். சரியான மொழிப் பயன்பாடு அல்ல, திருத்தங்களையும் தலையீடுகளையும் முடிந்த அளவு தவிர்க்க வேண்டும்.